**வாக்குமூலம்**

**மவாட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**C.C.No. 06/2024**

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **செல்வம்** | தொழில் | சார்பு ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : பெரியசாமி | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : தாண்டிக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 59/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.05.2026 |

**( எதிரிகள் A1, A2 மற்றும் A3 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தாண்டிக்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் அன்பழகன் பணி மூப்பில் சென்று விட்ட படியால் அவரது கையெழுத்து கையொப்பம் நன்கு பரீட்சியம் என்பதன் அடிப்படையிலும் ஆவணங்கள் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன் . கடந்த 02.04.2023 ஆம் தேதி 11.15 மணி அளவில் சார்பு ஆய்வாளர் அன்பழகன் நிலைய பொருப்பில் இருந்த போது கொடைக்கானல் பூலத்தூரைச் சேர்ந்த காமாட்சி மகன் சூர்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 50/2023 U/s. 294(b) , 323, 324 இ.த.ச. இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் . வாதி கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.**1 ஆகும். சார்பு ஆய்வாளர் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை **அ.சா. ஆ 2** ஆகும். இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்ட சார்பு ஆய்வாளர் அன்பழகன் 02.04.2023 ஆம் தேதி 14.30 மணிஅளவில் சம்பவ இடம் சென்று சாட்சிக ள் வினோத்குமார் , மருதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் , அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ 3 மற்றும் அ .சா.ஆ.4** ஆகும். மேலும் வழக்கின் தொடர்புடைய சாட்சிகளான சூர்யா , காமாட்சி, சதீஸ்குமார், கேசவன், விக்னேஷ்வரன் மற்றும் மேற்சொன்ன பார்வை மகஜர்

சாட்சிகள் வினோத்குமார் , மருதன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . சார்பு ஆய்வாளர் அன்பழகன் அவரது விசாரணையில் எதிரிகள் சந்தரமணிகண்டன் , சோனியா, சுப்பன் ஆகியோர் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என தெரியவர எதிரிகளை தேடி வந்த நிலையில் மேற்சொன்ன எதிரிகள் உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் அவர்களை கைது செய்யவில்லை. மேலும் இவ்வழக்கின் காயமுற்ற சாட்சி சூர்யா என்பவர்க்கு சிகிச்சை அளித்த வத்தலக்குண்டு அரசு மருத்துவமனை மருத்துவர் இசக்கி ராஜா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார் . அந்த காயச்சான்று **அ.சா.ஆ.5** ஆகும். இத்துடன் அவரது வழக்கு விசாரணையை முடித்து சார்பு ஆய்வாளர் அன்பழகன் எதிரிகள் சந்தரமணிகண்டன் , சோனியா, சுப்பன் ஆகியோர் மீது பிரிவுகள் U/s .294(b) , 323, 324 இ.த.ச.வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் சொன்னது போன்று சார்பு ஆய்வாளர் எந்த ஒரு புகார் மனுவும் பெறவில்லை என்றாலும், எந்த ஒரு சாட்சியையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் , வழக்கு ஆவணங்களை அணைத்தும் காவல் நிலையத்தில் வைத்து புகாருக்கு ஏதுவாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . எதிரிகள் குற்ற சம்பத்தில் ஈடுபடவில்லை என்றாலும் இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.20 14:56:50 +0530

District Munsif Cum Judicial Magistate No.I, Kodaikanal.